தொகுதியில் பால் கொள்முதல் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 314, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

314—

தூண்டில் வளைவு

***14033—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் தொகுதி, பாம்பன் வடக்குக் கடற்கரைப் பகுதியில் தூண்டில் வளைவு கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இராமநாதபுரம் மாவட்டம், பாம்பன் வடக்குக் கடற்கரைப் பகுதியில் தூண்டில் வளைவு அமைக்கப்படுமா என்ற கேள்வியை எழுப்பியுள்ளார்கள். சென்னை இந்திய தொழில்நுட்பக் கழகத்தின் கடல் பொறியியல் துறை, இராமநாதபுரம் மாவட்டம் கடற்கரைப் பகுதியில் ஆய்வு மேற்கொண்டு, தனது ஆய்வறிக்கையில், இராமநாதபுரம் மாவட்டம், கடற்கரைப் பகுதியில் கடல் அரிப்புத் தடுப்புச் சுவரோ, தூண்டில் வளைவோ அமைக்க வேண்டிய அவசியம் இல்லை எனக் குறிப்பிட்டுள்ளது. எனவே, இராமநாதபுரம் மாவட்டம், பாம்பன் வடக்குக் கடற்கரைப் பகுதியில் தூண்டில் வளைவு அமைக்கும் திட்டம் ஏதுமில்லை. அதற்கு சாத்தியமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2013 ஏப்ரல் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாம்பன் வடக்குக் கடற்கரைப் பகுதியில் தூண்டில் வளைவு அமைப்பது மிகவும் அவசியமான ஒன்றாகும். பாம்பன் பகுதியில் 50 நாட்டுப் படகுகள் உள்ளன; 100 விசைப் படகுகள் உள்ளன. அந்தப் பகுதியில், நவம்பர் மாதம் முதல் ஜனவரி மாதம் வரை பலமான காற்று அல்லது புயல் அடிக்கும்போது, அங்குள்ள படகுகளுக்குப் பாதுகாப்பு இருப்பதில்லை; ஒன்றோடொன்று மோதி சேதம் அடைகின்றன. சில நேரங்களிலே இந்தப் படகுகள் பாம்பன் பாலம் வரை இழுத்துச் செல்லப்படக்கூடிய ஒரு நிலை. மேலும், சேதமடைந்த படகுகளுக்கு இழப்பீடு கொடுக்கும் நிலையும் இல்லை. 2010 ஆம் ஆண்டு மே மாதம் அடித்த புயலிலே 100 நாட்டுப் படகுகள் மிக மோசமான வகையிலே சேதம் அடைந்தன. அப்பொழுது மாவட்ட ஆட்சியர் அவர்கள் நேரடியாக ஆய்வு செய்து, அங்கே தூண்டில் வளைவு அமைப்பதற்கான திட்ட மதிப்பீடுகள் எல்லாம் தயாரிக்கப்பட்டு, அது கிடப்பில் போடப்பட்டு இருக்கக்கூடிய ஒரு சூழல் இருக்கிறது. அங்கே இருக்கக்கூடிய நாட்டுப் படகு ஓட்டுநர்கள், அதேபோல விசைப் படகு ஓட்டுநர்கள் இதை நம்பி சுமார் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பத்தினர் இருக்கின்றார்கள். எனவே, இந்தப் படகுகள் பாதுகாப்பாக இருப்பதற்கு பாம்பன் வடக்குக் கடற்கரைப் பகுதியிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அரசு கனிவோடு பரிசீலித்து தூண்டில் வளைவு அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இராமநாதபுரம் தொகுதி கடற்பகுதியிலே கடல் அரிப்பைத் தடுப்பதற்காக வேண்டி தடுப்புச் சுவர் கட்டுவது சாத்தியம் இல்லை என்று ஓர் ஆய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். ஆனால், இராமநாதபுரம் தொகுதியிலே இராமேஸ்வரத்திலே ஓலைக்குடாவில் இருந்து ஆரம்பித்து மண்டபம் ஒன்றியத்திலுள்ள புதுமடம் வரை மிகப் பெரிய அளவிலே கடல் அரிப்பு தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இராமேஸ்வரத்திலே ஓலைக்குடாவிலிருந்து அக்னி தீர்த்தம் வரை 500 மீட்டர் கடல் அரிப்பு ஏற்பட்டிருக்கின்றது. பாம்பனிலே லைட் அவுஸ் பகுதி வரை 200 மீட்டர் கடந்த 10 ஆண்டுகளாக கடல் அரிப்பு ஏற்பட்டிருக்கிறது. அதேபோல, மண்டபத்திலே பாம்பன் பாலம் தொடக்கத்திலிருந்து மீன் வளத் துறை அலுவலகம் வரை 500 மீட்டர் கடல் அரிப்பு ஏற்பட்டிருக்கின்றது. அதேபோல, மரைக்காயர்பட்டினத்திலே C.M.F.R.I. ஜெட்டியிலிருந்து வேதாரண்யம் செல்லக்கூடிய சாலையிலே மகளிர் மன்றம் வரை 500 மீட்டர் கடல் அரிப்பு. அதேபோல, சுந்தரமுடையான் ஊராட்சியிலே, சீனியப்பா தர்கா பகுதியிலே 500 மீட்டர் கடல் அரிப்பு. அதாவது, தேர்தல் பிரச்சாரத்திற்காக நாங்கள் போகும்போது சாலை இருந்தது. ஆனால், நன்றி சொல்லப் போகும்போது அந்தச் சாலையே இல்லை. அந்த அளவிற்கு அங்கே கடல் அரிப்பு. ஊராட்சியிலே மீண்டும் அங்கே சாலை போட்டிருக்கிறார்கள். அதேபோல, புதுமடத்திலும் 500 மீட்டர் அளவிற்கு கடல் அரிப்பு ஏற்பட்டிருக்கக்கூடிய சூழலிலே, அங்கே இருக்கக்கூடிய கடல் பகுதியைப் பாதுகாப்பதற்காக நிச்சயமாக இந்த அரசு ஒரு தடுப்புச் சுவரை இந்தப் பகுதியிலே அமைப்பதற்கு முன்வருமா என்று கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன இடங்களையெல்லாம் உடனடியாக ஆய்வு செய்து தேவையிருப்பின்*

2013 ஏப்ரல் 25]

அந்தப் பகுதிகளில் உரிய வேலைகள் நடைபெறும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 315, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

315—

கால்நடைக் கிளை நிலையம்

***5620—திரு. கே.பி. பரமசிவம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், அமராவதி நகரில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மடத்துக்குளம் வட்டம், அமராவதி நகர் கிராமத்திலே ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அந்தக் கிராமத்திலே 3,000 கால்நடை அலகு இருந்தாலே போதும். அங்கே அதற்கும் அதிகமாக 5,700 கால்நடை அலகுகள் இருக்கின்ற காரணத்தினால் நிச்சயமாக முடியாது, இயலாது என்பதையெல்லாம் அகராதியிலே அறியாத மாண்புமிகு அம்மாவினுடைய அரசு நிச்சயமாக அங்கே ஒரு கால்நடைக் கிளை நிலையத்தை அமைத்துத் தரும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.*

திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

> *"மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்*
> *யாவுள முன்நிற் பவை."*